## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 1-4 - அஞ்சிறைய
## (எம்பெருமானது பிழை பொறுக்கும் குணத்தைப் பற்றாசாகக் கொண்டு தலைமகள் பறவை முதலியவற்றைத் தூது செல்ல விடுதல்)

2708 * அஞ்சிறைய மடநாராய்! * அளியத்தாய்! * நீயும் நின்
அஞ்சிறைய சேவலுமாய் * ஆவா! என்று எனக்கருளி **
வெஞ்சிறைப் புள்ளுயர்த்தார்க்கு * என் விடு தூதாய்ச் சென்றக்கால் *
வஞ்சிறையில் அவன் வைக்கில் * வைப்புண்டால் என் செய்யுமோ? 1

2709 என் செய்ய தாமரைக் கண் * பெருமானார்க்கு என் தூதாய் *
என் செய்யும் உரைத்தக்கால்? * இனக்குயில்காள்! நீரலிரே? **
முன் செய்த முழுவினையால் * திருவடிக் கீழ்க் குற்றேவல் *
முன் செய்ய முயலாதேன் * அகல்வதுவோ? விதியினமே 2

2710 விதியினால் பெடை மணக்கும் * மென்னடைய அன்னங்காள்! *
மதியினால் குறள் மாணாய் * உலகிரந்த கள்வர்க்கு **
மதியிலேன் வல்வினையே * மாளாதோ? என்று * ஒருத்தி
மதியெல்லாம்[1] உள்கலங்கி * மயங்குமால் என்னீரே 3

2711 என் நீர்மை கண்டிரங்கி * இது தகாதென்னாத *
என் நீலமுகில் வண்ணற்கு * என் சொல்லி யான் சொல்லுகேனோ? **
நன்னீர்மை இனியவர்கண் * தங்காதென்று ஒருவாய்ச் சொல் *
நன்னீலமகன்றில்காள்! * நல்குதிரோ? நல்கீரோ? 4

2712 நல்கித் தான் காத்தளிக்கும் * பொழில் ஏழும் வினையேற்கே *
நல்கத் தான் ஆகாதோ? * நாரணனைக் கண்டக்கால் **
மல்குநீர்ப் புனற்படப்பை * இரைதேர் வண் சிறுகுருகே!*
மல்குநீர் கண்ணேற்கு * ஓர் வாசகம் கொண்டருளாயே 5

2713 அருளாத நீர் அருளி * அவர் ஆவி துவரா முன் *
அருளாழிப் புள்கடவீர் * அவர் வீதி ஒரு நாள் என்று **
அருளாழி அம்மானைக் * கண்டக்கால் இது சொல்லி *
அருள் ஆழி வரிவண்டே! * யாமும் என் பிழைத்தோமே? 6

2714 என் பிழை கோப்பது போலப் * பனிவாடை ஈர்கின்ற[2] *
என் பிழையே நினைந்தருளி * அருளாத திருமாலார்க்கு **
என் பிழைத்தாள் திருவடியின் * தகவினுக்கு என்று ஒருவாய்ச் சொல் *
என் பிழைக்கும் இளங்கிளியே! * யான் வளர்த்த நீயலையே? 7

---
[1] மதியெலாம்
[2] ஈர்கின்றது

2715 நீயலையே? சிறுபூவாய்! * நெடுமாலார்க்கு என் தூதாய் *
நோய் எனது நுவலென்ன * நுவலாதே இருந்தொழிந்தாய் **
சாயலொடு மணிமாமை * தளர்ந்தேன் நான் * இனி உனது
வாயலகில் இன்னடிசில் * வைப்பாரை நாடாயே 8

2716 நாடாத மலர் நாடி * நாள் தோறும் நாரணன் தன் *
வாடாத மலரடிக் கீழ் * வைக்கவே வகுக்கின்று **
வீடாடி வீற்றிருத்தல் * வினையற்றதென் செய்வதோ? *
ஊடாடு பனிவாடாய்! * உரைத்தீராய் எனதுடலே 9

2717 உடலாடிப் பிறப்பு வீடு * உயிர் முதலா முற்றுமாய் *
கடலாழி நீர் தோற்றி * அதனுள்ளே கண் வளரும் **
அடலாழி அம்மானைக் * கண்டக்கால் இது சொல்லி *
விடலாழி மடநெஞ்சே! * வினையோம் ஒன்றாமளவே 10

2718 * அளவியன்ற ஏழுலகத்தவர் * பெருமான் கண்ணனை *
வளவயல் சூழ் * வண்குருகூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த **
அளவியன்ற அந்தாதி * ஆயிரத்துள் இப்பத்தின் *
வளவுரையால் பெறலாகும் * வானோங்கு பெருவளமே 11

**அடிவரவு:** அஞ்சிறை என் விதி என்னீர்மை நல்கி அருளாத என்பிழை
நீயலையே நாடாத உடல் அளவு வளவேழ்